௨. தகவல் கோரல்

(அ) எண்ணூர் அருகே மீனவரிடையே மோதல்

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அருகில் உள்ள எண்ணூரை அடுத்த பழவேற்காட்டிற்கும் திருப்பாலைவனத்திற்கும் இடையே உள்ள மீனவர்கள் வாழும் பகுதிகளான பூனங்குப்பம் மீனவர்களுக்கும், சப்பாணி குப்பம் மீனவர்களுக்கும் இடையே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மோதலில் ராமு என்ற ஒருவர் இறந்திருக்கிறார். அது தவிர, நேற்று அந்தப் பகுதியிலே பயங்கர ஆயுதங்களுடன் இரண்டு கோஷ்டிகள் மோதி 5 பேர்கள் பொன்னேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஐவருடைய நிலைமையும் கவலைக்கிடமாக இருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. ஏற்கெனவே ஒரு கொலை நடந்ததால் அந்தப் பகுதி சூனியப் பிரதேசமாகிவிடுவது வழக்கம். மறுபடியும் இந்தத் தகராறு, இந்த மோதல் எப்படி ஏற்பட்டது என்பதற்கு மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்புகள் எதுவும் இல்லாத நிலையில் எதையும் சொல்வதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுப்பார்களானால் ஒன்று இரண்டு நாட்களிலே முழு விவரங்களைத் திரட்டி, இந்த அவைக்குத் தெரிவிக்க முடியும். என்ன நிலை ஏற்பட்டது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற முழு விவரங்களைத் தரலாம். கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவர்கள் இன்றைக்கே தரலாம். இரண்டு மூன்று நாட்களிலே அதுபற்றிய விவரங்களைத் தரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலிலேயே உறுப்பினரிடம் கேட்டேன். அமைச்சரிடம் கேட்டீர்களா என்றேன். ஆம் என்றார். நான் அனுமதித்தேன்.